ஸ்வாமி ஜ்யோதிர்மயானந்தாவின் சிறு கதைகள்

Swami Jyothirmayananda's short stories

1931 ஆம் ஆண்டு பீகார் மானிலத்தில் ஒரு ஆசாரமான குடும்பத்தில் பிறந்து, 1953 ஆம் ஆண்டில் சன்யாச தீட்சை பெற்றவர் ஸ்வாமி ஜ்யோதிர்மயானந்தா அவர்கள். அமெரிக்காவில் மியாமி என்ற மானிலத்தில் 1969 ஆம் ஆண்டு யோக ஆராய்ச்சி நிலையம் மற்றும் ஆசிரமம் ஒன்றை நிறுவி யோக வழி முறைகளைக் கற்றுக் கொடுக்கும் அவர் பல்வேறு புத்தகங்கள் எழுதி உள்ளார். அவர் எழுதிய சிறு கதைகள் மனதை சிந்திக்க வைப்பவை. அதில் ஒன்றுதான் கீழே உள்ள கதையும். அவர் கொடுத்துள்ள அனுமதியும் கீழே உள்ளது.

Swami Jyotirmayananda was born in the year 1931 in Bihar to a noble and orthodox family and took to Sanya Diksha in the year 1953. He founded a Yoga research center and ashram in Miami, USA in the year 1969 and has been teaching the art of Yoga and its practices. Besides he has also authored several books. The short stories written by him are thought provoking. This bilingual story is one in them. The permission given by him is also reproduced below.

Swamiji <swamiji@bellsouth.net> Sun, 16 Jul, 2006 at 3:53 pm
To: nrj_1945@yahoo.com

N. R. Jayaraman

Blessed Self,
Adorations!

Your article was forwarded to me by Dr. Shashi B. Mishra.
I am pleased to see it.

You have my permission to publish translated versions (in Tamil))
of any article from my publications.

Dissemination of spiritual knowledge is the greatest
act of Divine Worship.

May God bless you with Success!

With regards Prem and Om,
Yours in the Lord
Swami Jyotirmayananda

சிவன் பார்வதி திருமணமா இல்லை மறுமணமா?

மூலக் கட்டுரையை தமிழில் சுருக்கி

எழுதியவர் : - சாந்திப்பிரியா

பகவான் சிவபெருமானுக்கும் பார்வதி தேவிக்கும் பலமுறை திருமணங்கள் நடைபெற்று உள்ளன. பல்வேறு சாபங்களின் காரணமாக பார்வதி தேவி பல்வேறு பிறவிகள் எடுத்து அவற்றில் பல பெற்றோர்களுக்கு மகளாகப் பிறந்தாலும், முடிவில் ஒவ்வொரு பிறவியிலும் அவர் பகவான் சிவபெருமானையே மணந்து கொண்டு உள்ளார் என்பதே உண்மை. அப்படிப்பட்ட ஒரு கதையே இது.

திருதேயுகத்தில் சிவ பெருமானும் அவருடைய மனைவியுமான பார்வதி தேவியும் தேவலோகத்தில் இருந்து இறங்கி ஆகாயத்தில் நடந்து கொண்டு இருந்தனர். திடீரென பகவான் சிவபெருமான் 'நெய் சச்சிதானந்தா' எனக் கூறியதைக் கேட்டு ஆச்சரியம் அடைந்தாள். அவரிடம் நீங்கள் தெய்வமாக இருந்தும் பூமியில் உள்ள சாதாரண மனிதருக்கு கை கூப்பி வணங்கியது என் எனக் கேட்க பகவான் சிவபெருமான் கூறினார் 'தேவி அவர் சாதாரண மனிதர் அல்ல, நான் வணங்கும் பரப்பிரும்மன்' எனக் கூறினார். அதைக் கேட்டு மனத் திருப்தி அடையாத பார்வதி தேவி 'அதெப்படி அவர் பரப்பிரும்மமாக இருக்க முடியும். காணாமல் போன தன்னுடைய மனைவியைத் தேடி காட்டில் சுற்றி அலைபவர் எப்படி பரப்பிரும்மமாக இருக்க முடியும் என மீண்டும் கேட்டதினால் பார்வதி தேவி உண்மையை உணர வேண்டும் எனில் அவள் நேரடியாக அவரை புரிந்து கொள்ள வேண்டும் என நினைத்த பகவான் சிவபெருமான் 'நீயே பூமிக்குச் சென்று பகவான் இராமன் எனும் அந்த மனிதரை அவர் பரப்பிரும்மா இல்லையா என்பதை சோதித்துப் பார்' எனக் கூறி அவளை பூமிக்கு அனுப்பினார்.

பார்வதி தேவியும் தன்னை பகவான் இராமனின் மனைவி போலவே மாற்றிக் கொண்டு அவர் உலவிக் கொண்டு இருந்த வனத்தருகில் சென்று சற்று தூரத்தில் நின்று கொண்டாள். அவள் வந்ததைக் கவனித்துவிட்டு பகவான் இராமரின் சகோதரர் பகவான் லஷ்மணரோ, இந்த நேரத்தில் பார்வதி தேவி ஏன் இந்த ரூபத்தில் வந்திருக்கின்றாள் என மனதில் குழம்பத் துவங்கினார். தூய மனித உருவில் இருந்த அவர்களுக்கா பார்வதி தேவியை அடையாளம் கண்டு பிடிக்க முடியாது? அதை கவனித்து விட்ட பகவான் இராமபிரான் தன் மனதில் சிரித்துக் கொண்டு நின்றிருந்தார். சீதா தேவியின் உருவில் பார்வதி தேவி நின்றிருந்த இடத்திற்கு சென்ற பகவான் இலஷ்மணர் தன் கைகளைக் கூப்டபியபடி 'தேவி இந்த நேரத்தில் பகவான் சிவபெருமானின் துணையின்றி தாங்கள் இங்கு வந்துள்ளதின் காரணத்தை அறியலாமா' எனக் கேட்க சீதா தேவி உருவில் இருந்த பார்வதிதேவிக்கு தர்ம சங்கடம் ஆகிவிட்டது. தான் தெரியாமல் தவறு செய்து விட்டோமோ என ஒரு கணம் நினைத்த போதிலேயே பகவான் இராமபிரான் தன்னுடைய மாயத் தோற்றத்தை அவள் முன் நிழலாட விட்டார். உலகத்துக்குள் உலகங்கள், யுக யுகமாக நடந்த நிகழ்ச்சிகள், அவற்றில் பகவான் சிவன், பகவான் விஷ்ணு, பகவான் பிரும்மா போன்ற அவதாரங்கள் என அனைத்தையும் காட்டினாலும், அந்த யுகங்கள் அனைத்திலும் தானும், சீதா தேவியும், பகவான் இலஷ்மணரும், அவரவர் உருவில் இருந்ததையும் காட்டினார். பார்வதி தேவி கண்களைத் திறந்து பார்த்தாள். பகவான் இராமனைப் பற்றி தான் கொண்டிருந்த தவறான எண்ணத்திற்கு அவமானப்பட்டு மீண்டும் தேவலோகத்திற்குத் திரும்பினார்.

அவளிடம் பகவான் சிவபெருமான் கேட்டார் 'என்ன பகவான் இராமனை சோதித்துவிட்டு வந்து விட்டாயா?' தான் அடைந்த அவமானத்தை மூடி மறைக்க பார்வதி தேவி கூறினாள் 'பிரபோ, நான் என்ன அவரை சோதிப்பது. நீங்கள் அவரை எப்படி வணங்கினீர்களோ அப்படித்தான் நானும் அவரை வணங்கிவிட்டு வந்தேன்' எனக் கூறினாலும், பகவான் சிவபெருமானுக்கு உண்மை தெரியாதா என்ன? அவள் தம்மிடமே பொய் கூறிவிட்டதினால் இப்பிறவியில் தன்னுடன் மனைவி ஸ்தானத்தில் வைத்துக் கொண்டு வாழ முடியாது எனத் தீர்மானித்தார். உடனேயே தான் ஒரு தனிமையான இடத்திற்குச் சென்று மகா சமாதியில் அமர்ந்து கொண்டார். அதற்கான காரணத்தைப் புரிந்து கொண்ட பார்வதி தேவி அழுது புலம்பினாள். தான் தெரியாமல் செய்து விட்ட தவறுக்காக மன்னித்து விடுங்கள் என்றும், தன்னால் அந்த பிறவியில் அவருடைய மனைவியாக இருக்க முடியாதெனில் எனக்கு தனக்கு மறு ஜென்மம் எடுக்க அருள் புரிந்து தன்னை மனைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என வேண்டியபடி அவர் எதிரில் தானும் அமர்ந்து கொண்டாள்.

பல ஆண்டுகள் கடந்தன. சமாதி நிலையில் இருந்த பகவான் சிவபெருமான் முன்னால் பார்வதி தேவியும் அமர்ந்து இருந்தாள். சமாதி நிலை கலைந்து 'ராமா, ராமா' எனக் கூறியபடியே கண்களைத் திறந்த பகவான் சிவபெருமானிடம் தன்னுடைய தந்தை தஷ்யன் நடத்தும் யாகத்திற்கு செல்ல அனுமதி கேட்டு பெற்றுக் கொண்டு தந்தையின் இருப்பிடம் சென்றாள். அவளுக்கு அங்கு

ஏற்பட்ட அவமானத்தைத் தாங்காமல் யாக குண்டத்தில் விழுந்து உயிர் விட முடிவு செய்தவள் மனதில் பகவான் இராமரிடம் வேண்டினாள்' நான் இந்த யாக குண்டத்தில் விழுந்து இறந்தாலும், வேறு எவருக்காவது மகளாகப் பிறந்து மீண்டும் பகவான் சிவபெருமானின் மனைவியாகவே ஆக வேண்டும்'. அதற்கேற்ப யாக குண்டத்தில் விழுந்து மரணம் அடைந்தவள் இமயமலை அதிபரான ஹிமாவத்தின் புதல்வியாகப் பிறந்தாள். அந்தப் பிறவியில் பகவான் சிவபெருமானை காதலித்து மணந்து கொண்டு மீண்டும் சிவபெருமானுடன் இணைந்தாள். எத்தனை பிறவி எடுத்தாலும் அத்தனைப் பிறவியிலும் பார்வதி தேவி பகவான் சிவபெருமானையே மணந்து கொண்டாள்.

ஸ்வாமி ஜோதிர்மயானந்தா இந்த கதையின் மூலம் ஒரு உண்மையான தத்துவத்தை அழகாக விளக்குகிறார். 'ஒரு தெய்வீக மனிதர் எவ்வாறு பிறக்க முடியும் என்று பார்வதி தேவி சந்தேகித்ததைப் போலவே', நாம் தேடும் அதே தெய்வீகம் நம் முன் நிற்கிறது என்பதை அறியாமல் தெய்வீகத்தைத் தேடி இட இடமாக அலைகிறோம். தெய்வங்கள் மனித அவதாரங்களை எடுத்துக் கொள்கிறார்கள். அறியாமையினால், மாயையில் உழலும் நாம் உண்மை நிலைகளை அறிந்து கொள்ள மறுக்கின்றோம்.

Lord Shiva-Goddess Parvati's marriage

Translation of above Tamil version into English by

Santhipriya

It is true that Goddess Parvati was born daughter to many parents in different periods of time to atone various curses, but at the end of the curse period, she had always married Lord Shiva in those births as well. This is the story of one such a birth.

In Thretha Yuga, Lord Shiva with his consort Goddess Parvati was strolling through the sky. Goddess Parvathi was surprised to hear Lord Shiva suddenly uttering 'Jai Satchidananda' with folded hands. When she asked him as to why he bowed down

to a human on earth, the Lord replied that he was not an ordinary human and was the very same Parabrahman whom he worship. When she contested his views by asking how a person wandering in the forest in search of his missing wife could be Parabrahman, Lord Shiva thought that she should personally experience who he was and therefore advised her to go the earth to personally verify whether Lord Ram was an ordinary human.

Therefore Goddess Parvati went to the forest and stood in disguise at a distance in the form of Goddess Sita. The moment Lord Lakshman noticed her, he wondered why was Goddess Parvati come in disguise of Goddess Sita? It was not difficult for him to identify her real identity as though in human form, they were absolute oneness in life and in state of pure consciousness. Lord Rama noticing it stood smiling within, even as Lord Lakshman went near the Goddess with folded hands and requested reason for her sudden appearance there without Lord Shiva. In front of the embarrassed Goddess Parvathi, Lord Rama unfolded the shadow images of past events in each of the Yugas, his various incarnations such as Lord Shiva, Lord Vishnu and Lord Brahma besides their own like Lord Ram and Goddess Sita along with Lord Lakshman. In every one of the Yugas, their appearances as Lord Rama, Goddess Sita and Lord Lakshman remained unchanged. Mind cleared Goddess Parvathi returned to Devaloga feeling shame for her act.

When Lord Shiva asked her whether she has verified the fact of Lord Rama, unwilling to admit the defeat, she lied that she went and came back after offering worship in the very same manner how he worshiped him. Lord Shiva was not

ordinary human not to understand her falsehood and real decided preferred to part ways with her in that life because she lied to him.

He went to a secluded place and sat in deep meditation with closed eyes. Immediately realizing the reason for his meditation she cried seeking his pardon and if she cannot be his consort in that life, then she should be given rebirth and marry him again. With such a prayer she too went and sat before him with closed eyes and went into deep Samadhi called meditation. When the state of Samadhi got dissolved after several years, and Lord Shiva opened his eyes chanting 'Ram, Ram', she too opened her eyes and sought permission to attend the Yagna performed by her father Daksha. Unable to bear the humiliation she suffered there, she decided to fall into the Yagna Kund and commit suicide. Accordingly, she fell into the Yagya Kund praying Lord Ram that she get birth as daughter of someone and remarry Lord Shiva again. Accordingly she was born the daughter of the Himalayan chief Himavat, fell in love with Lord Shiva and got married and reunited. No matter how many births she took, Goddess Parvati had always married only Lord Shiva.

Swamy Jyotirmayananda beautifully illustrates a true philosophy through this story. 'Just as Goddess Parvati doubted how a the divines could take human birth', so do we wander from place to place in search of divine without knowing that the very same divine whom we are searching stand before us. Divines take incarnations as human. We refuse to believe in ignorance what the men of wisdom preach and languish in the state of illusion. The above story illustrates the mind set of us.